**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No. 120/2021**
**Deposition of witness of Plaintiff – P.W.2(சின்னையா)**
**14.8.2024**

**7ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

மூக்கன்அம்பலம் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். எனது மனைவியும் சின்னையா என்பவரின் தாயாரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். ஒருவரின் மனைவி உயிருடன் இருக்கும் போது 2வது திருமணம் செய்தால் சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். மூக்கன்அம்பலம் எனது மனைவியின் சகோதரியை திருமணம் செய்த பிறகு அவரது மகன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் இறந்ததால் அவர்கள் சேர்ந்து வாழ வில்லை என்றும் வாதியின் தாயார் என்னுடைய இடத்தில் என்னுடன் வாழ்ந்துவருகிறார்கள் என்றால் சரிதான். மூக்கன் அம்பலம் கிணறு வெட்டுவதற்காக புதுக்கோட்டை கூட்டுறவு வங்கியில் வாங்கியிருந்தார் என்றால் சரிதான் அது தள்ளுபடி ஆகிவிட்டது. எந்த வருடம் கடன் வாங்கினார் என்று தெரியாது. அவர் கடன் வாங்கியதில் 12 வருடங்கள் திருப்பி செலுத்தியுள்ளார் என்றும் மீதி இருந்த சிறிதளவு தொகையே தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதிகள் தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும் என்னுடைய இடத்தில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். வாதியின் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

என்னை சாட்சி சொல்ல வாதிகள் அழைத்து வந்தனர். 1 முதல் 7 பிரதிவாதிகளுடன் பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதிகளுடன் பேச்சுவார்த்தை இல்லை என்பதால் தான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கும் வாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் அவர்கள் எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. கூட்டாக தான் உள்ளனர்.

**மறுவிசாரணை இல்லை**